பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:21 | 29.11.2023 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053





# பதில் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமனம்



மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலத்தை நிர்ணயிக்கும் பிரேரணை அமைச்சரவையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, பொலிஸ்மா அதிபரின் சேவைக் காலம் அதிகபட்சமாக 3 வருடங்கள் வரை வரையறுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நீண்டகாலமாக வெற்றிடம் நிலவி வருகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரட்னவிற்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டு வந்தது. எனினும் அண்மையில் அவர் ஓய்வு பெற்றுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் ஜனாதிபதிக்கும் அமைச்சருக்கும் இடையிலான கருத்து முரண்பாடு காரணமாக நியமனம் காலம் தாழ்த்தப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அரசியல் அமைப்பு பேரவை அனுமதி வழங்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் அறிமுகமாகிறது கேபிள் கார்

இலங்கையின் மத்திய மலைநாட்டில் முதலாவது கேபிள் கார் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்காக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது என இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள பல்லுயிர் பெருக்க வளாகம் மற்றும் இலங்கையின் முதலாவது பல மத சங்கம இடமாக விளங்கும் அம்புலுவாவவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சீனாவின் சர்வதேச கட்டட இயந்திர கூட்டுத் தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு நிபுணத்துவத்தினைப் பயன்படுத்தி கேபிள் கார் நிர்மாணிக்கப்படவுள்ளதாக இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார் மஹிந்த ராஜபக்ஷ



அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள ஜய ஸ்ரீ மகா போதிக்கும் விஜயம் செய்த மஹிந்தவிடம், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறி உள்ளார்.

இதேவேளை, தேசிய மட்டத்திலான தேர்தலை இலக்கு வைத்து ஜனவரி முதல் கிராமிய மட்டத்திலான தேர்தல் பிரச்சார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய சம்மேளனம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நடக்கவுள்ளது. மேலும் இந்த சம்மேளனத்தின் போது, கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

## புதைகுழி அகழ்வுப் பணியின் இரண்டாம் கட்டம் நிறுத்தம்!

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே முதலாம் கட்டத்தில் 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று (28) வரை 39 மனித உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட ஸ்கான் பரிசோதனை ஊடாக கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது கொக்கிளாய் முல்லைத்தீவு பிரதான வீதிப் பக்கமாக ஏற்கெனவே அகழ்வுக்காக தோண்டப்பட்ட இடத்திலிருந்து மேலதிகமாக ஒன்று தசம் ஏழு மீற்றர் வரை செல்வதாகவும் அகலமாக 3 மீற்றர் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஏற்கெனவே அகழப்பட்ட குழியில் இருக்கின்ற உடற்பாகங்கள் அகழ்தெடுக்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் இந்த அகழ்வுப் பணியானது இன்றுடன் இரண்டாம் கட்டம் நிறுத்தப்பட இருக்கின்றது.

மேலதிகமாக இனங்காணப்பட்டுள்ள உடற்பாகங்களை மீட்பதற்காக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியானது மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதகாலம் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

# ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு உபகரணப் பொதி வழங்கல்

இலங்கை பத்திரிகையாளர் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நாடளாவிய ரீதியிலுள்ள ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியினை இலங்கை பத்திரிகையாளர் பேரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அதன் உதவிப் பத்திரிகை ஆணையாளர் தில்ஹானி விஜேரத்ன தெரிவித்தார்.

தரமான ஊடக கலாசாரத்தை உருவாக்கி ஊடகவியலாளர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களின் ஊடகப் பணியினை முன்னெடுத்துச் செல்லும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு சலுகை முறையில் இப்பொதிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் இப்பொதியினைப் பெற்றுக்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு இராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல 58 இல் அமைந்துள்ள வங்கி கற்கைகளுக்கான நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு இப்பொதிகளை வழங்கி வைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பொதிகளை பெற்றுக்கொள்ள வருகின்ற ஊடகவியலாளர்கள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஊடக அடையாள அட்டை அல்லது ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் இப்பொதியை பெற்றுக்கொள்வதற்காக

இலங்கை பத்திரிகையாளர் பேரவையினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தையும் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்குரிய பொதிகளை அவர்களே முன்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்வரும் மாதம் 2023.12.06 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் வரவை உறுதிப்படுத்துவதற்கு 011-693271 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மத்தள விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

மத்தள சர்வதேச விமான நிலையத்தை இலாபம் ஈட்டும் முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு குறைந்தது ஏழு முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாக விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாத்தள விமான நிலையத்தில் விமானங்களை அசெம்பிள் செய்தல் மற்றும் பழுது நீக்கும் பணிகளை தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அமைச்சர் கூறினார்.

மத்தள விமான நிலையத்தின் இழப்புகள் 1.5 பில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலையம் செயற்படத் தொடங்கிய பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த இழப்பாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க பரிந்துரை

அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு சில பொருளாதார வல்லுநர்கள் பரிந்துரைகளை முன்வைத்திருந்தாலும் அரசாங்கம் என்ற ரீதியில் இதுபற்றிய முடிவு எதனையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத் திணைக்களத்தில் அத்தியாவசியப் பணிகளுக்கான ஆட்சேர்ப்பு குறைவாகவே உள்ளது. அரசின் செலவீனங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தை இலக்காகக் கொண்டு, வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மிகவும் வலுவான மற்றும் பயநர்களுக்கு நட்பான நடைமுறையை அறிமுகப்படுத்தி வரி வலையை விரிவுபடுத்த முயற்சிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

# சீன உர இறக்குமதியால் ரூ.1.3 பில்லியன் வீணானது

முக்கியமான பரீட்சைகளில் தோல்வியுற்ற போதிலும், விவசாய பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி இன்றியும் கரிம உரங்களை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனமொன்றுக்கு 1.3 பில்லியன் ரூபா தொகை செலுத்தப்பட்டமை 2022 ஆம் ஆண்டுக்கான ஆடிட்டர் ஜெனரலின் ஆண்டறிக்கையில் அம்பலமாகியுள்ளது.

தேசிய தாவர தனிமைப்படுத்தப்பட்ட மாதிரி சோதனைகள், இறக்குமதி செய்யப்பட்ட விவசாய உள்ளீடுகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதி செய்வதில் ஒரு முக்கியமான படி, கேள்விக்குரிய சீன கரிம உரத்திற்கு தோல்வியடைந்ததாகக் கூறப்படுகிறது. இந்த சிவப்புக் கொடிகள் இருந்தபோதிலும் உரம் இறக்குமதி செய்யப்பட்டது, இதனால் விவசாய சமூகத்திற்கு உறுதியான நன்மைகள் ஏதும் இல்லாமல், 1,383 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டது.

நிறுவப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றாமல் இறக்குமதியை அங்கீகரிப்பதில் அவர்களின் பங்கிற்காக அதிகாரிகள் இப்போது ஆய்வுக்கு உட்பட்டுள்ளனர். இச்சம்பவம் விவசாய இடுபொருட்களுக்கான கொள்முதல் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறன் பற்றிய கவலையைத் தூண்டியுள்ளது.

# போலி பெறுபேறு தயாரித்தவர்கள் கைது

இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட க.பொ.த சாதாரண தர, உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுத் தாள்களைப் போன்று போலியான பரீட்சை பெறுபேற்றுத் தாள்களை தயாரித்த நான்கு சந்தேக நபர்கள் கேகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கேகாலை குற்றப் புனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பைத் தொடர்ந்து குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.





**கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைய இன்றைய மாணவர்களே நாளைய தலைவர்கள் என்கிற மகுட வாக்கியத்துடன் கல்முனை கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு புதன்கிழமை காலை சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.**

# உக்ரைன் பனிப்புயலில் 10 பேர் உயிரிழப்பு



உக்ரைன் நாட்டின் தெற்குப் பகுதியான ஒடேசா ஒப்லாஸ்டை கடுமையான பனிப்புயல் தாக்கியதில் 10 பேர் பலியாகியுள்ளதாகவும் இரண்டு குழந்தைகள் உட்பட 23 பேர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உலக நாடுகளையே உற்று நோக்க வைத்தது உக்ரைன் - ரஷ்யா போர். சுமார் 21 மாதங்களுக்கும் மேலாக ரஷ்யா, உக்ரைன் மீது கொடூரத்தாக்குதல்கள் நடத்தி வருகிறது. இதனால் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள்கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றன.

இந்த நிலையில், நவம்பர் 26-27 ஆம் திகதிகளில் கடுமையான புயல், காற்று, மழை மற்றும் பனிப்பொழிவு உக்ரைனின் பெரும்பகுதியைத் தாக்கியது. இந்த நிலையில், பலத்த வேகத்துடன் பனிக்காற்று வீசியதில் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்துள்ளன.

இதனால் பல பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால் மக்களின் வாழ்க்கைமுறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# “காஸாவின் புனரமைப்புக்கு உதவுவேன்” - எலான் மஸ்க்



இஸ்ரேல்-ஹமாஸ் ஆகியவற்றுக்கு இடையிலான மோதல் காரணமாக உருகுலைந்து போயுள்ள பாலஸ்தீனத்தின் காஸாபகுதியின் புனரமைப்புக்கு உதவுவேன் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது இஸ்ரேல் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். காஸா புனரமைப்புக்கு உதவுவேன் என மஸ்க் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் மஸ்க் இடையிலான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எக்ஸ் தளத்தில் இது நேரலையில் வெளியானது.

“காஸா வாழ் மக்களுக்கு சிறந்த வாழ்க்கை வேண்டுமென்றால் ஹமாஸை முற்றிலுமாக அழிக்க வேண்டும். ஜேர்மனி மற்றும் ஜப்பானில் செய்தது போல நச்சு நிறைந்த ஆட்சியை அகற்ற வேண்டும்” என நெதன்யாகு, மஸ்க் வசம் தெரிவித்தார்.

“அதை விட்டால் வேற சாய்ஸ் இல்லை” என மஸ்க் அதற்கு பதில் கொடுத்துள்ளார்.

# உலக கண்காட்சியில் இருந்து ரஷ்யா விலகியது

ஒசாகாவில் நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டு உலக கண்காட்சியில் இருந்து விலகுவதாக ரஷ்யா செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

ஒரு ரஷ்ய பிரதிநிதி பாரிஸில் உள்ள சர்வதேச கண்காட்சிகளின் பணியகத்தின் முழுமையான அமர்வில், ஒசாகாவில் நடைபெறும் உலக கண்காட்சியில் பங்கேற்பதைத் தவிர்க்க மாஸ்கோ முடிவு செய்துள்ளது என்று கூறினார்.

கடந்த வாரம், ஜப்பானிய அரசாங்கம் ரஷ்யா எக்ஸ்போவில் பங்கேற்காது என்று குறிப்பிட்டது.

உக்ரைன் மீதான நாட்டின் படையெடுப்பைச் சுற்றியுள்ள “தற்போதைய சூழ்நிலையில் எந்த மாற்றமும் இல்லை என்றால், ஒசாகா-கன்சாய் எக்ஸ்போவில் ரஷ்யாவின் பங்கேற்பை நாங்கள் கருதமாட்டோம்” என்று எக்ஸ்போவின் பொறுப்பான அமைச்சர் ஹனாகோ ஜிமி வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

2025 ஆம் ஆண்டு மேற்குஜப்பானில் நடைபெறவுள்ள கண்காட்சியை மெக்சிக்கோவும் எஸ்டோனியாவும் கலந்துகொள்வதில்லை என தீர்மானித்ததை அடுத்து ரஷ்ய அறிவிப்பு வெளியாகியுள்ளது.




# தலைவிரித்தாடும் புதிய பிரச்சினையால் சோகத்தில் வடகொரிய மக்கள்



முடி உதிர்தல் தொற்றுநோய் வடகொரியாவில் வேகமாகப் பரவுகிறது என்று தென்கொரிய நிபுணர்கள் கூறுகின்றனர். அதற்கு காரணம் வடகொரியாவில் பயன்படுத்தப்படும் சோப்பு மற்றும் சலவை சோப்புகள் என்று நிபுணர்கள் குற்றம் சாட்டினர். வடகொரியர்கள் பயன்படுத்தும் சோப்பு மற்றும் சலவை சோப்புகளில் அதிக அளவு இரசாயனங்கள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் விரைவான முடி உதிர்வு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. மேலும் வடகொரியாவில் இராணுவம் தொடர்பாக கடுமையான விதிமுறை உள்ளது.

அனைத்து உடல் திறன் கொண்ட ஆண்களும் பொதுவாக ஆயுதப்படையில் 10 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.

பெரும்பாலான ஆண்கள் இராணுவத்தில் பணி புரிந்து வருவதால், அவர்களுக்கு தலைமுடி உதிர்வு பிரச்சினை அதிகமாக உள்ளது. தற்போது வடகொரியாவில் மட்டுமின்றி தென்கொரியாவிலும் திடீரென முடி உதிர்வது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

# 30 கைதிகளை இஸ்ரேல் விடுவித்தது
## 12 பிணையக்கைதிகளை விடுவித்தது ஹமாஸ்

ஏழு வார இஸ்ரேல்-ஹமாஸ் போரை நிரந்தரமாக நிறுத்துவதற்கு மத்திய கிழக்கு நாடுகள் முயற்சித்து வரும் நிலையில், மேலும் 12 பிணையக் கைதிகளை செவ்வாயன்று காஸா சிறையிலிருந்து ஹமாஸ் விடுவித்தது.

30 பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவித்ததை அடுத்து, ஹமாஸ் மேலும் 12 பிணையக் கைதிகளை விடுவித்துள்ளது.

இந்த முறை விடுவிக்கப்பட்ட பிணையக்கைதிகளில் பத்து இஸ்ரேலியர்களும் இரண்டு தாய்லாந்து நாட்டுக் காரர்களும் இருந்தனர் என்று இஸ்ரேலிய பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்த அந்த 12 பிணையக்கைதிகளும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.


இதற்கிடையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் 30 பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்பட்டதாக இஸ்ரேல் சிறைத்துறை தெரிவித்திருந்தது.

# ஆய்வுக் கட்டுரை போல் வடிவமைக்கப்பட்ட திருமண அழைப்பிதழ்

திருமண அழைப்பிதழை வடிவமைக்க நிறைய நிறைய வித்தியாசமான முறையில் யோசித்து வருகிறார்கள். திருமண அழைப்பிதழ் நகைச்சுவைக்காக சமூக வலைதளத்தில் வைரலாகுவதால் அனைவரும் அதேபோல தங்களுடைய திருமண அழைப்பிதழையும் வடிவமைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சமீபத்தில், தமிழ்நாட்டின் திருவண்ணாமலையைச் சேர்ந்த ஒரு திருமண ஜோடி, அழைப்பிதழை ஆக்கபூர்வமான சிந்தனையை எடுத்து, டேப்லெட் ஸ்டிரிப்பின் பின்புறம் போல வடிவமைத்துள்ளனர். இது போன்ற புதுமையான மற்றும் நகைச்சுவையான திருமண அழைப்பிதழ்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி அனைவரையும் மகிழ்விக்கின்றன.





அந்த வகையில், வங்காள தேசத்தில் ஒரு பி.எச்.டி முடித்த ஜோடி தங்களுடைய திருமண அழைப்பிதழை ஆய்வுக் கட்டுரை போல் வடிவமைத்துள்ளது வைரலாகி வருகிறது.

# சீனாவில் அதிகரிக்கும் சுவாச நோய்த்தொற்று
## உஷார் நிலையில் இந்தியா

சீனாவில் குழந்தைகளிடையே சுவாச நோய்த்தொற்று அதிகரித்து வருவதால், நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளின் தயார்நிலையை உறுதி செய்யுமாறு, அனைத்து மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு அறிவுறுத்தி இருந்தது.

இந்நிலையில், மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க, அனைத்து மருத்துவமனைகளும் உஷார் நிலையில் இருக்குமாறு குறைந்தது 5 மாநில அரசுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

ராஜஸ்தான், கர்நாடகா, குஜராத், உத்தரகாண்ட், தமிழ்நாடு ஆகிய மாநில அரசுகள், சுவாசக் கோளாறுகளுடன் வரும் நோயாளிகளைச் சமாளிப்பதற்கான தயார்நிலையை உறுதி செய்யுமாறு மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தியுள்ளன.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# திருடப்படும் அரச சொத்துகள்

காங்கேசன்துறை பகுதியில் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான சீமெந்து தூண்களை உடைத்து அவற்றின் கம்பிகளை திருடர்கள் திருடுவதாகவும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினர், காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் இல்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

காங்கேசன்துறைமுகத்திற்கு அருகில் உள்ள துறைமுக அதிகார சபையினருக்கு சொந்தமான காணியில் பெரியளவிலான சீமெந்து தூண்கள் காணப்படுகின்றன. அவை துறைமுக அபிவிருத்திக்காக கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகிறது. கடந்த காலங்களில் உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட அந்தப் பிரதேசங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்த நிலையில், இராணுவத்தினர் தற்போது அங்கிருந்து வெளியேறிய நிலையில் அவ்விடங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. துறைமுக அதிகார சபையின் காணிக்குள் அத்துமீறி நுழையும் திருடர்கள் அங்கு உள்ள துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான தூண்களை உடைத்து கம்பிகளை திருடுகின்றனர். தூண்களிலுள்ள இரும்புக்காக உடைத்து சேதப்படுத்தி இரும்புகளை திருடிச் செல்கின்றனர் என்ற செய்தி வெளியாகி உள்ளது.

அரச சொத்துகளைப் பாதுகாக்க வேண்டிய அரச அதிகாரிகளும் பொலிஸாரும் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் பொது மக்களால் எதுவும் செய்ய முடியாது. காங்கேசன்துறையைச் சுற்றியுள்ள பகுதியில் இரும்பு திருட்டு போவது ஒன்றும் புதிய செய்தி அல்ல. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சுமார் 120 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியுடைய இரும்புகள் திருடப்பட்டுள்ளதாகவும் சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மபிரிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தால், தொழிற்சாலைக்கு அருகில் வசிக்கும் பிரதேச வாசிகள் தொழிற்சாலை வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து திருட்டுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 33 வருட காலமாக தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பாதுகாப்பாக இருந்த நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னரே இவ்வாறான திருட்டுகள் அதிகரித்து வருகின்றன.

மேலும் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, இரும்பு திருட்டை தடுக்க பாதுகாப்புக் குழுவொன்றை தாம் நியமித்துள்ள போதிலும் திருட்டில் ஈடுபடும் பிரதேச வாசிகளுக்கும் பாதுகாப்புக் குழுவிற்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த காலப் பகுதியில் பெருமளவான இரும்புகள் திருடப்பட்டதுடன், இரும்பு திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில இராணுவத்தினரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1990 காலப் பகுதியில் யுத்த காலத்தில் சீமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டது. இராணுவம் அப்பகுதியில் இருந்து விலகிய பின்னர் பெறுமதியான பொருட்கள், தளபாடங்கள், இரும்புகள் என்பனவற்றைக் குறிவைத்து திருடர்கள் தொழிற்சாலைக்குள் நுழைந்தனர். இரும்புகளை டென்டர் முறையில் ஏலம் விட அமைச்சரவை மட்டத்தில் முயற்சி செய்யப்பட்டது. பின்னர் என்ன நடந்ததெனத் தெரியாது.

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவிற்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் காமினி ஏக்கநாயக்க, அரசுக்கு சொந்தமான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில், அமைச்சரின் அனுசரணையுடன் பல பில்லியன் ரூபா திருட்டு இடம்பெற்றுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்புகள் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் தான் எந்த வேளையிலும் பொலிஸாரிடம் சரணடைய தயார் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில், நான் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் செல்வேன் அதன் காரணமாக பொலிஸார் என்னைக் கைது செய்யலாம்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்வதற்கு சபாநாயகரின் அனுமதி தேவை என்பதால் அதனை வழங்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறதா? இல்லையா? என்பது தெரியவில்லை. இதேவேளை இராஜாங்க அமைச்சர் சரணடைய முன்வந்துள்ளதால் அவரை கைது செய்யலாம் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இரும்பு திருட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? வழக்கு விசாரணை தொடர்கிறதா? போன்ற விபரமெதுவும் பொது வெளியில் பகிரப்படவில்லை.

## உத்தராகண்ட் மாநிலம் உத்தர்காசி அடுத்த சில்க்யாரா பகுதியில் சுரங்கம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது

**நவம்பர் 12:**

தீபாவளியன்று சரியாக அதிகாலை 5.30 மணிக்கு, எதிர்பாராத விதமாக மண்சரிவு ஏற்பட்டது. இதனால், அங்கு பணியில் இருந்த 41 தொழிலாளர்களும் சுரங்கத்தில் சிக்கிக் கொண்டனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுக்கள், இந்தோ திபெத்தியன் எல்லைப் படைகள் விரைந்தன. தொழிலாளர்களுக்கு குழாய் மூலம் ஒட்சிசன் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

**நவம்பர் 13 :**

ஒட்சிசன் செலுத்தப்பட்ட குழாய் மூலம் தொழிலாளர்கள் உயிரோடு இருப்பது தெரியவந்தது. இதனால், மீட்புக் குழுவினர் நிம்மதி பெருமூச்சு அடைந்தனர்.

ஆனால், தொடர்ந்து 60 மீற்றர் தொலைவுக்கு மண்சரிவு ஏற்பட்டதால், இடிபாடுகளை அகற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

**நவம்பர் 14:**

இடிபாடுகளின் வழியே ஆகர் இயந்திரத்தின் உதவியோடு 800 மற்றும் 900 மில்லி மீற்றர் அளவிலான இரு குழாய்கள் கிடைமட்டமாக செலுத்தப்பட்டன.

ஆனால், அப்போது சுரங்கத்தில் சில இடிபாடுகள் விழுந்ததில், தொழிலாளர்களுக்கு சிறிய காயம் ஏற்பட்டது. இதனால், சுரங்கத்தைச் சுற்றியுள்ள மண் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதேநேரத்தில், குழாய் வழியாக தொழிலாளர்களுக்கு உணவு, மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டன.

**நவம்பர் 15:**

முதல் ஆகர் இயந்திரத்தால் பணிகளில் முன்னேற்றம் இல்லாததால், அமெரிக்காவின் 25 டன் எடை கொண்ட அதி நவீன ஆகர் இயந்திரம் கொண்டுவரப்பட்டது.

**நவம்பர் 16:**

ஆகர் இயந்திரம் மூலம் 6 மீற்றர் கொண்ட 5 குழாய்கள் செலுத்தப்பட்டன. 4 குழாய்கள் வெற்றிகரமாக சென்ற நிலையில், 5 ஆவது குழாய் செலுத்துவதில் இடர்பாடு ஏற்பட்டது. 5 ஆவது குழாய் செலுத்தியபோது பயங்கர சத்தம் கேட்டதால், மேலும் சுரங்கத்தில் இடிபாடுகள் ஏற்படக்கூடும் என்று கருதி பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

**நவம்பர் 17:**

5 வெவ்வேறு வழிகளில் மீட்புப் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டன. அதில் செங்குத்தாக துளையிடும் பணியும் ஒன்று.

**நவம்பர் 18 :**

செங்குத்தாக துளையிடும் பணிக்காக மலையின் உச்சிக்கு சாலை அமைக்கப்பட்டது.

**நவம்பர் 19:**

மீட்புப் பணி முன்னேற்றம் கண்டது. 6 அங்குலம் அளவு கொண்ட குழாய்செலுத்தப்பட்டது. அதன் மூலம் உணவு, பழங்கள், மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டன. அதே நாள், அவுஸ்திரேலியாவில் இருந்து சர்வதேச சுரங்க நிபுணர் அர்னால்ட் டிக்ஸ் வரவழைக்கப்பட்டார்.

**நவம்பர் 20:**

எண் டோஸ்கோபி கேமரா மூலம் முதன் முறையாக தொழிலாளர்கள் வீடியோக்கள் வெளிவந்தன.

அவர்கள் உரையாடிக் கொள்வதும், ஆரோக்கியமாக இருப்பதும் காட்சிகளாக தோன்றின. இதனால், தொழிலாளர்களின் உறவினர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

**நவம்பர் 21:**

ஆகர் இயந்திரத்தின் வழியில் ஒரு இரும்புக் குழாய் தென்பட்டதால் மீட்புப் பணிகள் 3 ஆவது முறையாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

**நவம்பர் 22:**

ஆகர் இயந்திரம் ஒரு உலோகத்தின் மீது மோதியதால் மீண்டும் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டது.

**நவம்பர் 23:**

இன்னும் 12 மீற்றர் அளவுக்கே துளையிட வேண்டி இருந்த நிலையில், திடீரென ஆகர் இயந்திரத்தின் ஒரு பகுதி நொறுங்கியதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இனி ஆகர் இயந்திரத்தைப் பயன்படுத்த முடியாத சூழல் ஏற்பட்டதால், நம்பிக்கை தளரத் தொடங்கியது.

**நவம்பர் 24:**

துளையிடும் பணி மீண்டும் தொடங்கியது. மீண்டும் இடையூறு ஏற்பட்டது.

**நவம்பர் 25:**

சுரங்கத்தின் மேற்பகுதியில் செங்குத்தாக சுமார் 90 மீற்றர் தொலைவுக்கு துளையிடும் பணிகள் தொடங்கின.

மெட்ராஸ் சேப்பர்ஸில் இருந்து ஆர்மி என்ஜினியர்களும் களத்தில் இறங்கினர்.

**நவம்பர் 26:**

செங்குத்தாக 19.2 மீற்றருக்கு துளையிடப்பட்டது. தொழிலாளர்கள் வெளியே வர மாற்றுவழி உருவாக்கப்பட்டது. அந்த வழியில் குழாய் நுழைக்கப்பட்டது.

**நவம்பர் 27:**

கடைசி 12 மீற்றர் தொலைவுக்கு மேனுவல் ட்ரில்லிங் எனப்படும் கைகளால் மெஷின்களைப் பயன்படுத்தி துளையிடும் முறை பின்பற்றப்பட்டது. அதே நேரத்தில் செங்குத்தாக துளையிடும் பணியும் 86 மீற்றரில் 40 மீற்றர் தொலைவுக்கு நிறைவு பெற்றது.

**நவம்பர் 28:**

அதிவேகத்தில் மேனுவல் டிரில்லிங் பணிகள் நடைபெற்றன. கடைசி நேரத்தில், ரட்ஹொலெ மினிங் என்ற தடை செய்யப்பட்ட முறையைப் பயன்படுத்தி பணிகள் இரவு 7 மணிக்கு வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. அதன்பிறகு, தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர், 41 தொழிலாளர்களையும் பாதுகாப்புடன் மீட்டனர்.

# நெதர்லாந்திலிருந்த கலைப்பொருட்கள் இலங்கைக்கு கொடுக்கப்பட்டன

கண்டி அரசமாளிகையில் இருந்து 1756 ஆம் ஆண்டு டச்சுக்காரர்களால் நெதர்லாந்துக்குக் கொண்டு செல்லப்பட்ட வாள், பீரங்கி உட்பட 6 கலைப்பொருட்கள் நெதர்லாந்திலிருந்து இன்று (29) மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த கலைப்பொருட்களில் கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னரின் திருமண வாள், பீரங்கி, 2 பெரிய துப்பாக்கிகள் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை 05.05 மணி அளவில் ஜேர்மன், பிராங்பேர்ட்டில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-554 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இந்த தொல்பொருட்கள் கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



இவை தவிர இங்கிலாந்து உட்பட சுமார் 20 வெளிநாடுகளில் இந்த இலங்கையில் இருந்து திருடப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவு உள்ளன.

அவற்றையும் எதிர்காலத்தில் இலங்கைக்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பில் டெங்கு நோய் அதிகரிப்பு

கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் 3,465 டெங்கு நோயாளர்கள் இருப்பதாகவும் தற்போது பெய்து வரும் அதிக மழையுடன் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“கொழும்பில் தற்போது 3,465 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 80% டெங்கு என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டிசம்பரில் இது மேலும் அதிகரிக்கலாம் என்று எங்களுக்குத் தெரியும். 320 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருந்ததாகத் தெரிவித்த வைத்திய அதிகாரி, அவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகளை வழங்கியதன் மூலம் குழந்தைகளின் எண்ணிக்கையை 102 ஆகக் குறைக்க முடிந்தது என்றும் கூறினார்.

# போதகர் ஜெரோம் நாடு திரும்பினார்



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ இன்று (29) அதிகாலை கட்டார் ஏர்லைன்ஸில் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு திரும்பியதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில் அவர் 48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்கு மூலம் வழங்கவுள்ளார்.

# இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளின் சாதகமான முடிவு

இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங்கும் நாடுகளின் குழு தெற்காசிய நாட்டிற்கான கடன் நிவாரணம் மற்றும் திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவை நீட்டிப்பது தொடர்பான உடன்பாட்டை எட்ட வாய்ப்புள்ளது என்று ஜப்பானின் ஜிஜி நியூஸ் புதன்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கு பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்து ஜப்பான் தலைமை தாங்குகிறது. சீனா இலங்கையின் மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குனராக உள்ளது.

பல தசாப்தங்களில் மிக மோசமான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, கடந்த ஆண்டு முதல் கடன் நிவாரணம் வழங்கும் நாடுகளுடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை எட்ட முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் மா அதிபரின் சேவைக்காலம் மூன்று வருடங்களுக்கு மட்டும்?

பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படும் அதிகாரியின் பதவிக்காலத்தை அதிகபட்சமாக மூன்று வருடங்களுக்கு மட்டுப்படுத்தும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி 60 வருட சேவையை பூர்த்தி செய்யாத பட்சத்தில் மேற்கண்ட தீர்மானம் அந்த அதிகாரிக்கும் பொருந்தும் அதன்படி அவர் பொலிஸ் மா அதிபராக பதவியேற்று மூன்று வருடங்கள் கழித்து ஓய்வு பெற வேண்டும்.

அமைச்சர்கள் சபையினால் எடுக்கப்பட்ட இந்த முடிவின்படி, எதிர்காலத்தில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படும் எந்தவொரு அதிகாரியின் சேவைக்காலம் அதிகபட்சமாக 3 வருடங்கள் வரை மட்டுப்படுத்தப்படும்.

# மீண்டும் “சேனா” படைப்புழு

“சேனா” படைப்புழு சேதத்தினால் மக்காச்சோளச் செய்கை பாதிக்கப்பட்டு வருவதால், “சேனா” படைப்புழு சேதத்தைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய திணைக்களம் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த பருவத்தில் பல மாவட்டங்களில் சோளம் பயிரிடப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சின் கீழ் சிறிய அளவிலான விவசாய வர்த்தக பங்கேற்பு திட்டத்தின் கீழ் அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மொனராகலை மற்றும் மாவட்டங்களில் 40,000 ஏக்கர் சோளம் பயிரிடப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# தற்கொலை செய்ய கடலில் குதித்த சிறுமி மீட்பு

பாணந்துறை கடற்கரையில் வந்த சிறுமி ஒருவர் கடலில் அடித்து செல்லப்பட்டபோது பாணந்துறை பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பிரிவு அதிகாரிகளான சப்-இன்ஸ்பெக்டர் நிமல்சிறி, பொலிஸ் கான்ஸ்டபிள் தசுன் ஆகியோர் உடனடியாக செயற்பட்டு சிறுமியின் உயிரைக் காப்பாற்றியதாக பொலிஸ் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரைக் காப்பாற்றிய சிறுமியை தாயிடம் ஒப்படைத்தபோது, சிறுமி தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தில் கடலில் குதித்திருப்பது தெரியவந்துள்ளது.

# தேசிய பாதுகாப்பு குறித்து அச்சப்பட தேவையில்லை - பந்துல குணவர்தன



தேசிய பாதுகாப்பு குறித்து அச்சப்படத் தேவையில்லை என்று வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் முன்னாள் பயங்கரவாதத் தலைவர் பிரபாகரனின் மகள் என கூறப்படும் பெண் ஒருவர் விடுத்த அழைப்பு மற்றும் நாட்டின் பாதுகாப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் இடம்பெறுவதை இந்த நாட்டிலுள்ள எவரும் விரும்ப மாட்டார்கள் என தெரிவித்த அமைச்சர், நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

# இந்தியாவின் வெற்றியைப் பறித்த மக்ஸ்வெல்



அசாம் மாநில கெளகாத்தி நகரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ரி20 போட்டியில் 5 விக்கெட்டுகளினால் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 222 ஓட்டங்கள் எடுத்தது. 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த அவுஸ்திரேலியா 225 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஜெய்ஸ்வால் 6 ஓட்டங்களில் வெளியேற இசான் கிசான் டக் அவுட்டாக்கினார். 29 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்த சூர்யகுமார் யாதவ் ஆட்டமிழந்தார். 21 பந்துகளில் 21 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ருதுராஜ் தடுமாறினார். அதிரடியாக விளையாடி 32 பந்துகளில் அரை சதமடித்தார். அதிரடியாக விளையாடிய அவர் 90 ஓட்டங்களைக் கடந்து கிளன் மக்ஸ்வெல் வீசிய கடைசி ஓவரின் முதல் பந்தில் அட்டகாசமான சிக்ஸருடன் தன்னுடைய முதல் ரி20 சதத்தை அடித்தார்.

ரி20 கிரிக்கெட்டில் சவாலான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற அபாரமான சாதனையும் அவர் படைத்துள்ளார். இதற்கு முன் சுரேஷ் ரெய்னா, ரோஹித் சர்மா, கே.எல்.ராகுல், விராட் கோலி போன்ற இந்திய வீரர்கள் தென்னாபிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான் போன்ற அணிகளுக்கு எதிராக மட்டுமே ரி20 கிரிக்கெட்டில் சதம் அடித்திருந்தனர்.

கடைசி வரை ஆட்டமிழக்காது மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 13 பவுண்டரி 7 சிக்ஸருடன் 123* (57) ரன்களை 215 என்ற ஸ்ட்ரைக் ரேட்டில் சூப்பர் பினிஷிங் கொடுத்தார். அவருடன் திலக் வர்மா தம்முடைய பங்கிற்கு 31* (24) ஓட்டங்கள் எடுத்ததால் 20 ஓவர்களில் இந்தியா 222/3 ஓட்டங்கள் குவித்து அசத்தியது. கடைசி ஓவர் வீசிய மக்ஸ்வெல் 30 ஓட்டங்களைக் கொடுத்தார். 223 ஓட்டங்களை துரத்திய அவுஸ்திரேலியாவுக்கு ஆரோன் ஹார்டி அதிரடியாக விளையாட முயற்சித்து 16, டிராவிஸ் ஹெட் 35, ஜோஸ் இங்லீஷ் 10,



மார்க்கஸ் ஸ்டோனிஸ் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். எதிர்பார்க்கப்பட்ட டிம் டேவிட் இளம் வீரர் ரவி பிஷ்னோய் சுழலில் கிளீன் போல்ட்டானார். அந்த நிலையில் வந்த கப்டன் மத்தியூ வேட் தம்முடைய பங்கிற்கு வெற்றிக்கு போராடிய நிலையில் மறுபுறம் இந்திய பவுலர்களை பந்தாடிய மக்ஸ்வெல் அரை சதம் கடந்து அச்சுறுத்தலைக் கொடுத்ததால் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது.

கடைசி ஓவரில் 21 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது முதல் பந்திலேயே பவுண்டரி அடித்த வேட் 2 ஆவது பந்தில் சிங்கிள் எடுத்தார். ஆனால் 3, 4, 5, 6 பந்துகளில் 6, 4, 4, 4 ஓட்டங்களை எடுத்த மக்ஸ்வெல் சதமடித்து 104* (48) ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியைத் தேடிக் கொடுத்தார். 47 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்த அவர் ரி20 கிரிக்கெட்டில் அதிவேகமாக சதமடித்த ஆரோன் பிஞ்சின் சாதனையைச் சமன் செய்தார்.

இது மக்ஸ்வெல்லின் நான்காவது ரி20 சதமாகும் மேலும், அவுஸ்திரேலிய வீரர் ரோஹித் ஷர்மாவுடன் அதிக சதங்கள் விளாசினார். 35 வயதான அவர் தாமதமாக எரியும் வடிவத்திலுள்ளார். கடந்த மாதம் 2023 ஒருநாள் உலகக்கோப்பையில் நெதர்லாந்துக்கு எதிராக 40 பந்துகளில் சதம் அடித்து போட்டியின் வரலாற்றில் அதிவேக சதத்தை பதிவு செய்தார்.

அதைத் தொடர்ந்து உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் இரட்டைச் சதம் விளாசிய மக்ஸ்வெல், அவுஸ்திரேலியாவை அசத்தலான வெற்றியைப் பெற உதவினார்.

அவுஸ்திரேலியர்களின் வேகமான ரி20 சதம்

ஆரோன் பிஞ்ச் - 47 பந்துகள் - 2013 இல் சவுத்தாம்ப்டனில் இங்கிலாந்துக்கு எதிராக

ஜோஷ் இங்கிலிஸ் - 47 பந்துகள் - 2023 இல் விசாகப்பட்டினத்தில் இந்தியாவுக்கு எதிராக

**கிளென் மக்ஸ்வெல்**

- 2023 இல் கவுகாத்தியில் இந்தியாவுக்கு எதிராக 47 பந்துகள்

- 2016 இல் பல்லேகெலேவில் இலங்கைக்கு எதிராக 49 பந்துகள்

- 2019 இல் பெங்களூருவில் இந்தியாவுக்கு எதிராக 50 பந்துகள்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 29.11.2023 அன்று வெளியிடப்பட்டது.